## நன்றிப்பாடல்

நன்றி கீதம் நான் பாடுவேன் இயேசுவே
நாளும் உந்தன் அன்பில் வாழுவேன்
நன்றி இறைவா நன்றி நாதா -2

புதுமையான அன்பு நீர் பொழிந்த
தியாக அன்பு
புதிய வாழ்வு கண்டேன் நான்
புதியவனானேன் (2)
அதனால் புதிய ராகம் மீட்டி புது ஜதியில்
மேளதாளங்கட்டி

பயனில்லாத என்னில் நீ பரிவு பொழிந்த
போது
பசுமை என்னில் கொண்டேன் நான்
பலன்மிகக் கண்டேன் (2)
உந்தன் புனிதத் தேகம் இரத்தம்
என் இதயத் தாகம் தீர்ந்ததையா

## மரியன்னைப்பாடல்

சகாயத் தாயே எங்கள் சந்தோசம் நீயே
சதா எம்மைத் தேற்றுகின்ற தேவனின்
தாயே (2)
உம்மை மன்றாடி நலம் அடைந்தோம்
கொண்டாடி நன்றி பொழிந்தோம் (2)

மாதா நீ ஈன்ற இயேசு எங்கள் தெய்வம்
நீதான் அவர் சொன்ன யாவும் செய்த
நெஞ்சம் (2)
மரியே மாமரியே எங்கள்நல் மாதிரியே -
2
எம்மையுன் பிள்ளைகளாய்
அரவரணத்தாயே - உம்மை......

அம்மா உன்பாதம் வீழ்ந்துகிடக்கும்
மலர்கள்
அன்பும் நிம்மதியும் வேண்டும் எங்கள்
மனங்கள் (2)
உன்னையே சரணடைந்தோம்
உன்னருள்கரம் விழைந்தோம் -2
இன்னலில் இடராமல் நல்வழிநடக்க -
உம்மை......

# மாதாந்த திருப்பலிப் பாடல்கள்

### ஒக்டொபர் 2019

## வருகைப்பாடல்

இறைமக்களே கூடிவாருங்கள் உங்கள்
இருகரமும் கூப்பி வாருங்கள் (2)
உறுதியான நம்பிக்கையில் இறையிடம்
வரம் கேளுங்கள்
கேட்டதெல்லாம் கேட்டபடி
கிடைத்ததென்று மகிழுங்கள்

கடுகளவு நம்பிக்கையால் கடலையுமே
கல்தரையாய்க் காயச்செய்யலாம்
அணு அளவு நம்பிக்கையால்
இமயத்தையும்
ஆழ்கடலில் மூழ்கச் செய்யலாம்
உன்னுடைய நம்பிக்கையே உன்னைக்
குணமாக்கியது -2
என்று சொல்லும் இறைவாக்கை
இதயத்திலே சுமந்தவராய்

ஒருவார்த்தை சொன்னாலே
போதுமையா
ஒருகுறையும் இல்லாமல் போகுமையா
உனதாடை விளிம்பை நான் தொட்டால்
போதும்
ஓடிவிடும் உடனடியாய் இந்நோய்
என்றார்
உன்னுடைய நம்பிக்கையே...

## தியானப்பாடல்கள்

உன் திருயாழில் என் இறைவா பல
பண்தரும் நரம்புண்டு
என்னையும் ஓர் சிறு நரம்பெனவே -
அதில்
இணைத்திட வேண்டும் இசையரசே

யாழினை நீயும் மீட்டுகையில் - இந்த
ஏழையின் இதயம் துயில் கலையும் (2)
யாழிசைக் கேட்டுத் தனை மறந்து - 2
உந்தன்
ஏழிசையோடு இணைந்திடுமே
இணைந்திடுமே

விண்ணகச் சோலையில் மலரெனவே -
திகழ்
எண்ணிலாத் தாரகை உனக்குண்டு (2)
உன்னருட் பேரொளி நடுவினிலே - 2
நான்
என் சிறு விளக்கையும் ஏற்றிடுவேன்
ஏற்றிடுவேன்

## காணிக்கைப் பாடல்

ஏழை எந்தன் உள்ளத்தை ஏந்தித் தட்டில்
தாங்கியே
வாழ்வும் செயலும் சிந்தனையும்
வாஞ்சையோடு அளிக்கின்றேன்
ஏற்றருள்வீர் எம் பிதாவே - 2

நீளக் கிண்ண இரசமதிலே நீர்த்துளி
போலே கலந்து
நேச இயேசுவின் பாசத்திலே
நிரந்தரமாய் நான் நிலைத்திடவே
ஆசைக்கொண்டேன் அருள்புரிவீர் - 2

இன்றும் என்றும் உம்மிடமே இயேசுவே
நான் வாழ்ந்திடுவேன்
இனிமேல் வாழ்வது நானல்ல இயேசுவே
என்னில் வாழ்ந்திடுவார்
என்ற வரத்தை எனக்களிப்பீர் -2

## திருவிருந்துப்பாடல்

குறையாத அன்பு கடல் போல வந்து
நிறைவாக என்னில் அலை மோதுதே -
அந்த
அலைமீது இயேசு அசைந்தாடி வரவே
பலகோடி கீதம் உருவாகுதே

கண்மூடி இரவில் நான் தூங்கும்போது
கண்ணான இயேசு என்னைக்
காக்கின்றார் (2) - உன்னை
எண்ணாத என்னை எந்நாளும் எண்ணி
மண்மீது வாழ வழிசெய்கிறார் ஆ...
(நான்) -2

அடிவானம் தோன்றும் விடிவெள்ளி
என்றும்
தொடர்கின்ற இரவின் முடிவாகுமே (2) -
மண்ணில்
துடிக்கின்ற ஏழை வடிக்கின்ற கண்ணீர்
துடைக்கின்ற இயேசு அரசாகுமே ஆ...
(கண்ணீர்) - 2